விஜயபாரதம்
23.08.2020 மலர் - 1, இதழ் - 140 VIJAYABHARATHAM WEEKLY
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)

# வணக்கம்

# விநாயகர் சதுர்த்தி - சுபம் !

❁ நேற்று விநாயகர் சதுர்த்திக்கு வாழ்த்து தெரிவித்தவர்கள். முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், துணை முதல்வர் ஓ. பன்னீர் செல்வம், பாஜக தலைவர் எல்.முருகன், த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன், டிடிவி தினகரன், சரத்குமார், ஜக்கி வாசுதேவ், ஏ.சி.சண்முகம் மற்றும் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

❁ ஸ்டாலின், வை.கோ, திருமா, கமல், அழகிரி, ராம்தாஸ், ஆகியோர் வாழ்த்து தெரிவிக்கவில்லை. ஆனால் இவர்கள் பக்ரீத், ரம்ஜான், கிறிஸ்துமஸுக்கு வாழ்த்து தெரிவிக்க மறப்பதில்லை!

❁ திமுகவில் உள்ள ஹிந்துக்கள் இதுபற்றி கட்சி தலைமையிடம் கேளுங்கள்.

❁ விஜயபாரதம் 19.8.2020 மின்னணு இதழ் எடப்பாடியாரின் சிந்தனைக்கு'' என்று தலையங்கம் எழுதியிருந்தோம். அதற்கு தி.க.வின் விடுதலை நாளிதழில் (வெள்ளி) ''மிரட்டுகிறதா விஜயபாரதம்'' என்று தலையங்கம் எழுதியிருந்தார்கள்.

❁ தமிழகம் முழுவதும் ஹிந்து முன்னணி சார்பில் தனியார் இடங்களில், வீடுகளில், கோயில்களில் விநாயகர் சதுர்த்தி விழா சீறும் சிறப்போடும் நடைபெற்றது. ஏதாவது குழப்பம் வராதா என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாந்துபோனார்கள். ஹிந்து முன்னணி ஒரு கட்டுப்பாடான இயக்கம் என்பதை நிரூபித்துவிட்டது.

❁ நேற்றைய மின்னணு இதழில் பொல்லாப் பிள்ளையார் பற்றியும், நம்பி ஆண்டார் பற்றியும் செய்திகள் வெளியாகியிருந்தன. அதன் தொடர்ச்சியாக ராஜராஜ சோழன் நம்பி ஆண்டார் நம்பியை சந்தித்த விபரம் இன்று 4 – பக்கத்தில் வெளியாகியுள்ளது.

# பரதன் பதில்

*'தேசப்பிதா' என்று காந்திஜியை முதன் முதலில் அழைத்தது யார்?*

***மெயிலில் கே.என். ராமலிங்கம் தர்ம்புரி***

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முதலில் தேசப்பிதா என்று அழைத்தார். தேசப்பிதா என்றால் நாட்டின் தந்தை என்று பொருள். அப்படியானால் காந்திஜி பிறப்பதற்கு முன்பு இந்த நாட்டிற்கு தந்தை கிடையாதா என்ற கேள்வி வரும்.



## தாலுகா அலுவலகத்தில் விநாயகர் சதுர்த்தி



ஒருவர் விளாத்திகுளத்திற்கு 15 விநாயகர் சிலைகளை வாங்கி சென்று கொண்டிருந்தார். காவலர்கள் அவரை தடுத்து சிலைகளை பறிமுதல் செய்து தாசில்தார் அலுவலகம் கொண்டு சென்றனர். தகவல் அறிந்த பாஜகவினர் பேச்சுவார்த்தை நடத்த சென்றனர். முடிவில் போலீஸார் சிலைகளை கொண்டு செல்ல ஒப்புக்கொண்டனர். ஆனால் பாஜகவினரோ நாங்கள் ஒரு பிள்ளையார் சிலையை வைக்க உங்களிடம் மன்றாடினோம். நீங்கள் மசியவில்லை. ஆனால் பாருங்கள் நீங்களே 15 பிள்ளையார்களை கொண்டு வந்து வைத்துள்ளீர்கள். இனி முறைப்படி பூஜை செய்துதான் எடுப்போம். அதுவரை இங்கேயே இருக்கட்டும். அதுவரை இணைந்து தினமும் பூஜை செய்வோம் என கூறி அங்கிருந்தவர்களுக்கு இனிப்புகள் வழங்கினர். தற்போது போலீஸாருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை

*ஈ.வே.ரா ஒரு விநாயகர் சிலையை உடைத்தார். விநாயகர் வீதி தோறும் வந்து அமர்ந்தார். இன்று வீதி தோறும் விநாயகருக்கு தடை. நாளை வீடு தோறும் விநாயகர் வருவார்.*

## கிறிஸ்தவ போலீஸின் அராஜகம் !



சேலம் பக்கத்தில் தேவூரை சேர்ந்த சரவணன் என்ற சிவனடியார் அமாவாசை அன்று பூஜை செய்து கொண்டிருந்தார். அப்போது காவல் உதவி ஆய்வாளர் அந்தோணி மைக்கேல் அங்கே வந்துள்ளார். வேண்டும் என்றே சிவனடியாரை தரக்குறைவாகப் பேசி லத்தியால் சகட்டுமேனிக்கு அடித்துள்ளார். இதனால் மனமுடைந்த அவர், தன் இறப்புக்கு அந்த எஸ்.ஐதான் காரணம் என குற்றம்சாட்டி வீடியோ வெளியிட்டு விஷமருந்தி தற்கொலை செய்துள்ளார். இதை மூடி மறைக்க காவல்துறை முயல்வதாகவும், அவரின் குடும்பத்தாருக்கு மறைமுக மிரட்டல் விடுப்பதாகவும் செய்திகள் வருகின்றன.

*ஒரு ஹிந்து காவலர் பாதிரியாரைத் தாக்கி அவர் இறந்திருந்தால் கழகங்கள் சும்மா இருக்குமா?*

**உலகிலேயே மிக உயரமான பிள்ளையார் இருப்பது பாரதத்தில் அல்ல. தாய்லாந்தில். 128 அடி (39 மீட்டர்) உயரம்.**



# தேவாரம் கிடைத்த கதை



நம்பி ஆண்டார் நம்பிக்கு விநாயகர் தரிசனம் அளித்த செய்தி ராஜராஜ சோழனை எட்டியது. நீண்ட நாட்களாக தேவார ஓலைச்சுவடிகள் இருக்கும் இடத்தைத் தேடி வந்தான் மன்னன். மன்னன் நம்பி ஆண்டாரைத் காண வந்தார். நம்பியை விநாயகரிடம் பிரார்த்தித்து தேவார ஓலைச்சுவடிகள் இருக்குமிடத்தை கண்டுபிடித்து தருமாறு வேண்டினார்.

நம்பி விநாயகரிடம் உளமுருக பிரார்த்தித்தார். விநாயகரின் அருளால் ஓலைச்சுவடிகள் சிதம்பரம் நடராஜர் கோயிலின் வடமேற்கு மூலையில் ஒரு அறையில் இருப்பதாக தெரிந்தது.

மன்னன் உடனடியாக சிதம்பரம் கோயில் சென்று அங்குள்ள தில்லைவாழ் அந்தணர்களிடம் விவரத்தை கூறினார். அந்தணர்களோ தேவாரம் பாடிய மூவரும் வந்தால்தான் அந்த அறையைத் திறப்போம் என்று தெரிவித்தனர்.

மன்னர் உடனடியாக மூவர் விக்கிரகத்தை தயார்செய்து அந்தணர்களிடம் கொண்டு சென்றார். அவர்களோ இது சிலைகள் தானே என்றனர். அதற்கு மன்னன் நீங்கள் வணங்கும் தில்லை நடராஜர் வெறும் சிலையென்றால் இதுவும் சிலைதான். அது தெய்வம் என்றால் இவர்களும் தெய்வம்தான் என்றார். மன்னரின் பதிலால் திருப்தி அடைந்த அந்தணர்கள் தேவார ஓலைச்சுவடிகள் இருந்த அறையை திறந்து கொடுத்தார்கள். அங்கு பல ஓலைச்சுவடிகள் கரையான் அரித்திருந்தது.

அங்கிருந்த கரையான்கள் அகற்றப்பட்டன. சில ஓலைச்சுவடிகள் வீணாகிவிட்டது. மீதமிருந்த ஓலைச்சுவடிகளை தொகுத்துத் தருமாறு நம்பியாண்டாரிடம் மன்னன் கேட்டார். நம்பியும் தொகுத்து அருளினார்.

**இப்படித்தான் நமக்கு தேவாரம் கிடைத்தது.**